1968 ஆகஸ்ட் 23]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது டாக்டர் ஹாண்டே அவர்கள் மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

3. கவன ஈர்ப்பு.

(i) இராமேஸ்வரத்தில் நிலையான கடற்பாலம் இலலாமை

DR. H. V. HANDE : Sir, I call the attention of the Hon. the Minister for Public Works to a matter of urgent public importance, viz., the absence of a pucca pier in Rameswaram for the disembarking of lakhs of Indian repatriates from Ceylon who are likely to come to India regularly from January 1969.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 1964 டிசம்பரில் தென் இந்தியாவின் தென்கோடி முனையைப் புயல் தாக்கிய போது முன்பிருந்த தனுஷ்கோடி துறைமுகத்திலுள்ள கடற்பாலமும் இருப்புப்பாதையும் நீரில் அடித்துச் செல்லப்பட்டன. இந்திய—இலங்கைப் படகுப் போக்குவரத்தைத் தொடர்ந்து நடத்த வசதியாயிருக்கும் பொருட்டு மாநில அரசாங்கம் இராமேஸ்வரத்தில் தாற்காலிக மரத்தோணித் துறையை அமைத்தது.

இந்திய–இலங்கைப் படகுப் போக்குவரத்திற்கு நிலையான கடற்பாலம் ஒன்றைக் கட்டுவது பற்றி இந்த அரசாங்கம் ஆலோசித்தது. இராமேஸ்வரத்திற்கு அருகிலுள்ள ரெட்டத்தாழையில் ஓர் இடம் இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த இடத்திற்கு இந்திய அரசும் ஒப்புதல் அளித்தது. கடற்பாலம் கட்டுவதற்கும், பயணச்சாமான் வைப்பதற்கும், சுங்கச்சாவடி அமைப்பதற்கும், மின்சாரம் நீட்டித்தல் முதலியவற்றுக்கும், ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டுத் தொகைக்கான திட்டத்தைத் (கட்டிட) தலைமைப் பொறியாளர் பணிந்தனுப்பினார்.

இதற்கிடையில், இலங்கையிலிருந்து இந்தியர்கள் தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்படுவதனால், அவர்களை இங்கு கொண்டுவந்து சேர்ப்பதற்கான ஏற்பாடுகள் முக்கியமடைந்தன. இலங்கையிலிருந்து தாயகத்திற்கு அனுப்பப் படவிருப்போரின் வருகையால் ஏற்படும் சிக்கலுக்குத் தீர்வுகாண இராமேஸ்வரத்திலுள்ள தாற்காலிக ஏற்பாடுகள் சிறிதும் போதுமானவை அல்ல. தமிழ்நாட்டு அரசாங்க அதிகாரிகளுடன் மத்திய அரசு மறுவாழ்வு அமைச்சு அதிகாரிகள் இது குறித்துக் கலந்து பேசினர். புது டில்லியில் 1968, மே திங்களில் நடைபெற்ற கூட்டத்தில் தனுஷ்கோடியில் இருக்கும் கடற்பாலத்தை மீண்டும் புதுப்பித்து, இராமேஸ்வரத்திலிருந்து பாம்பனுக்குச் செல்லும் சாலையை இணைத்து தனுஷ்கோடியிலிருந்து இராமேஸ்வரத்திற்குச் சாலை அமைப்பதும், தனுஷ்கோடியில் தற்போதுள்ள கட்டிடங்களைச் சீர்படுத்துதலும், அப்பகுதிக்கு நீர் வழங்குவதையும் மின்சாரம் வழங்குவதையும் நீட்டித்தலும் இச்சிக்கலுக்கு விரைந்த தீர்வு காண்பதாகுமென்று அதில் கலந்துகொண்டவர்கள் ஒருமனதாக ஒப்பினர், இலங்கையிலிருந்து திரும்பிவரும் அகதிகளின் உடனடித் தேவைகளை நிறைவு செய்ய இவற்றைச் செய்து முடிக்க வேண்டும். மேற்சொன்ன எல்லாப் பணிகளுக்கும் ஏற்படும் மொத்தச் செலவு சுமார் ரூ. 75 இலட்சம். தனுஷ்கோடியில் உள்ள கடற்பாலத்தைச் சீராக்கும் பணிக்கு மட்டும் ரூ. 17 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. பல பணிகளுக்கு அவசியமான திருத்திய மதிப்பீடுகளைத் தலைமைப் பொறியாளர் தயாரித்தார் ; இவை இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த மதிப்பீடுகளுக்கு முறையான ஒப்புதல் கிடைப்பதை எதிர்நோக்கி, இதனை நிறைவேற்றும் பணிகளை மேற்கொண்டு நடத்துமாறு இந்திய அரசு மாநில அரசாங்கத்தை அனுமதித்துள்ளது.

மேற்சொன்ன செயற்குறிப்புகளையொட்டி, இராமேஸ்வரம் துறைமுகத்திற்கு அருகிலுள்ள ரெட்டத்தாழையில் நிலையான கடற்பாலம் ஒன்றை கட்டும் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்தும் அவசியம் ஏற்படவில்லை.

DR. H. V. HANDE : There are two aspects involved. First of all to build a pier it takes a long time and it involves extraordinary cost. So, will it be possible for the Government to examine immediately the feasibility of having at least a motorable road of ten miles or eleven miles between Rameswaram and Dhanushkodi? Urgently it can be built without waiting for the sanction of the Centre. That will solve the problem. Will that be done ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தனுஷ்கோடியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு சாலை அமைக்கும் திட்டத்தைத் துரிதப்படுத்த டெண்டர் வரையிலே கோரப்பட்டது என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

(ii) **தீயினால் பாதிக்கப்பட்ட குடிசை வாழ்வோர் நிலை**

DR. H. V. HANDE : Sir, I call the attention of the Hon. Minister for Food to a matter of urgent public importance, viz. the living conditions of more than three lakhs of hut dwellers after the series of fires in the slums and the steps to improve their living conditions.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Deputy Speaker, Sir, the call attention notice relates to the living conditions of more than three lakhs of hut dwellers after the series of fires in the slums and the steps to improve their living conditions.

Under the scheme of relief to the victims of fire accidents who are poor and whose monthly pay excluding allowances is Rs. 50 and below or who pay an assessment of Rs. 10, a cash grant of Rs. 60 and clothing grant of Rs. 20 per family were paid for replacement of lost clothes and utensils. After the fire accident the victims in Madras City are paid the cash and clothing grant by the District Collector irrespective of their income. The Government have recently issued orders for constructing fire proof houses at a cost of Rs. 350 each in suitable sites in Pulianthope and Sivashanmugapuram (Teynampet) areas and on an extent of five acres of Corporation land in S. No. 128/1 of Perambur through the Public Works Department. The number of houses estimated to be constructed in these places is as indicated below :—

Pulianthope	1,020
Sivashanmugapuram (Teynampet)	140
S. No. 128/1 of Perambur	840
Total ..	2,000

A sum of four lakhs from out of the City Fire Relief Fund has also been ordered to be placed at the disposal of the Chief Engineer (Buildings) who will construct the houses as deposit works.